விளம்பி ஹூ ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2018

ஸ்ரீ:

மலர்: 1
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





ஸ்ரீ:

விளம்பி ஹு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2018

மலர்: 1
இதழ்: 7


ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விஶ்வரூபம் | 6.00 | - | விஶ்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - ஶயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board:**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4

Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell: 95000 45604

Designed: ye**SK**ay





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**

மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799

Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com





ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்³ரி ஸமம் ஸ்தா²நம் ப்³ரஹ்மாண்டே³ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே³வோ ந பூ⁴தோ ந ப⁴விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

புரட்டாசி பிறந்தது; நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 'தேசிகன் 750' உத்ஸவ வைபவங்கள் தொடங்கின. வழக்கமான வார்ஷிகோத்ஸவத்தை விட இவ்வருட விசேஷம் என்னவெனில், ஆறு நாட்கள் காலை வேளையில் ஸ்வாமி திருவீதி எழுந்தருளும் பல்லக்குக்கு பதிலாக, ஆறு திருக்கோலங்களில் – முரளீ க்ருஷ்ணனாக / பரமபத நாதனாக / நாச்சியாராக / வேணுகோபாலனாக / காளிங்க நர்த்தனனாக / வெண்ணைத்தாழி கண்ணனாக - ஸேவை ஸாதித்ததுதான். ஸேவித்தவர்கள் 'இவர் திருவேங்கடமுடையானா! வேங்கடநாதனா!!' என மயங்கும் (மயக்கும்) அளவுக்கு சாத்துப்படி அமைந்திருந்தது, கைங்கர்யபரர்களின் கைவண்ணமே. இவ்விதழில் அதன் படங்களைக் கண்டு மகிழலாம்.



மற்றுமொரு விசேஷம் – ஒவ்வொரு தினமும் ஸாயம் திருப்பாவை சாற்று முறையை அடுத்து 'உபசார உத்ஸவ'மாக, புஷ்பயாகம் / தீப ஆராதனம் / அன்ன கூட உத்ஸவம் / பலோத்ஸவம் / டோலோத்ஸவம் / புஷ்ப அலங்காரம் / திவ்யதேச மரியாதைகள் என கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. (திவ்யதேச மரியாதைகள் வைபவத்தைப் பற்றி, ஒரு விசேஷக்கட்டுரை இவ்விதழில் இடம்பெறுகிறது)

மயிலை நம் ஸந்நிதியில் ப்ராயச்சித்த உத்ஸவமாக நடத்தப்படும் திருப் பவித்ரோத்ஸவம் 'ஜகத் ப்ரஸித்தம்' என்றால் மிகையாகாது. இவ்வருடமும் –இன்னும் விசேஷமாக நடந்ததை – எம்பெருமானும்/ ஸ்வாமி தேசிகனுமே – உகந்திருப்பர்.

திருக்கோயிலைச் சார்ந்திருக்கும் ஸ்ரீபாதம் தாங்கிகள் குழு, ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்த ஸ்வர்ண



ஸிம்ஹாஸநம்; அத்யாபக கைங்கர்ய ஸபையினரால் ஸமர்ப்பிக்கப்பட்ட ‘ராமாநுஜதயாபாத்ர தனியன்’ பொறிக்கப்பட்ட ஸ்வர்ண ஹாரம்; வநபோஜனம் ட்ரஸ்ட் ஸமர்ப்பித்த கல்இழைத்த திருமண்காப்பு போன்ற திருவாபரணங்கள் – இவையெல்லாம் அபிமானிகளின் அபரிமிதமான தேசிக-பக்திக்கு நிரந்தர அடையாளங்களாக மிளிர்வது ஸேவார்த்திகளின் திருவுள்ளத்துக்கு விருந்தே.

அனைத்துக்கும் சிகரம்போல்அமைந்தது, இம்மாதம் ஸ்ரீமத் பரவாக்கோட்டை சின்னாண்டவன், பரம. பரி. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கோபால மஹாதேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, எம்பெருமான்-ஆழ்வார்-ஆசார்யர்களை மங்களாசாஸநம் செய்ததுதான். அர்ச்சகர்களும்-அதிகாரிகளும்-ஆஸ்திகர்களும் ஸகல மரியாதைகளுடன் ஸ்ரீமத் ஆண்டவனை எழுந்தருப்பண்ணியது; அன்னாரும் உள்ளம் உகக்க ஸேவித்து பிறகு மணி மண்டபத்தில் வீற்றிருந்து முறைப்படி அனைவரையும் அனுக்ரஹித்தது – இவை எல்லாம் ஸேவித்தவர்களின் பாக்ய விசேஷமே.

நவராத்ரி உத்ஸவம் என்றாலே, பிராட்டியுடன் எம்பெருமானுக்கு திருமஞ்சனம்; மாலை விசேஷ அலங்காரத்துடன் ‘பத்தி-உலா’; இரவில் ஏகாஸனத்தில் சேர்த்தி, மறுநாள் காலை களைவதற்கு முன் சேர்த்தி-ஸேவை என கொண்டாட்டம்தான். அதுவும், உத்ஸவம் தனியாக (ஸ்வாமி தேசிகன் உத்ஸவத்துடன் சேர்ந்து வராமல்) அமைவதும் ஒரு அழகு – அவஸரப்படாமல் கார்ய-க்ரமங்கள் நடக்கவும்; ஆஸ்திகர்கள் நிதானமாக ஸேவிப்பதற்கும் தோதாக இருக்கிறதல்லவா!

புரட்டாசி முடிவதற்கு முன்னரே, ஸ்தல அவதார புருஷரான பேயாழ்வாரின் பத்து-நாள் வார்ஷிகோத்ஸவம் தொடங்கிவிட்டது.

இவை அனைத்தின் ஒளிப் படங்களை இவ்விதழில் கண்டு ஆனந்திக்கலாம்.

**குறிப்பு:- இவ்விதழ் தொடங்கி, இனிவரும் கட்டுரைகளிலும் / சுட்டுரைகளிலும் பெரும்பாலும் ‘ஸ’ என்ற எழுத்துக்குப் பதிலாக ‘ச’ என்றே அச்சிடப்படும். வாசகர்கள் உசிதம்போல் மாற்றி வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது கணினி தொழில்நுட்ப ஸௌகர்யத்தை உத்தேசித்து செய்யப்படும் மாறுதலே.**

ஸ்ரீ:

## ஓரங்க நாடகம்

# "மயிலை நடுவே குருகூர் அழைக்க வல்லார்"

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**இடம்:** ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலை


**தினம்:** விளம்பி. புரட்டாசி. உத்திராடம். வியாழன் (20.9.18) மாலை 5 மணி

**பாத்திரங்கள்:** பேயாழ்வார், மயிலைப் பதி வாழ் மாந்தர் (அடியார்கள்)

**(காட்சி)**

**பேயர்:** த்ரேதாயுக ப்ரவர்த்தித கார்த்தயுக வ்ருத்தாந்த! (த்ரேதா யுகத்திலும் க்ருத யுகத்தை நடத்தியவரே!)

**அடியார்கள்:** தமிழ்த் தலைவனே! தண்டமிடு கிறோம்; மஹாவீர வைபவ அநுஸந் தானமோ?



ஸ்ரீ பேயாழ்வார்

**பேயர்:** வையத்து வாழ்வீர்காள்! கவிதார்க்கிக ஸிம்ஹமும்- ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரும்- வேங்கடநாதனும்- வேதாந்தாசார்யரும், ராம-தயாபாத்ரரும், மஹாவீரருமான, திருமயிலையில் கோயில்கொண்டு அமர்ந்த தூப்புல் மாபுருடனின் 750-வது அவதார பூர்த்தி தின உத்ஸவத்தில் அன்னாரின் அகடித கடனா-ஸாமர்த்ய வைபவத்தைக் 'கண்டேன்'; மயிலாபுரீப்ரவர்த்தித குருகாபுரீ வ்ருத்தாந்த! (மயிலையைக் குருகூராக மாற்றியவரே) எனக் களித்தேன்.

**அடியார்கள்:** சிறுமதி படைத்த அடியோங் களுக்குப் புரியவில்லை! விளக்கியருள வேணும்.

**பேயர்:** ப்ரபந்ந ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வார், கலியுகத்தொடக்கத்தில் குருகூர்-திருப்புளி ஆழ்வார் ஸந்நிதியில் யோகத்தில் அமர்ந்திருந்தவாறே, அனைத்து திவ்யதேச எம்பெருமான்களையும் 'அடியேன் தொழ வந்தருளே' என ப்ரார்த்தித்து ஸேவைகொண்டாரே அதுபோலல்லவா தூப்புற்பிள்ளை அனைத்து எம்பெருமான் களையும் இன்று ஒன்றுசேர திருமயிலைக்கு ஈர்த்து ஸேவை கொள்கிறார் – அதனை நினைத்தேன்.

**அடியார்கள்:** தேவே! இப்போது புரிகிறது. ஏறக்குறைய 90 திவ்யதேசங்கள்- 20 அபிமான க்ஷேத்ரங்கள்- 20 ஆழ்வார் / ஆசார்யர்கள் அவதாரஸ்தலங்களிலிருந்து திருப்பரியட்ட-மாலை மரியாதைகள் ஏந்தி அர்ச்சகர்கள் குழுமியிருப்பதைக் காண்கிறோம். இது, ஸ்வாமி தேசிகன் 120-க்கும் மேற்பட்ட க்ரந்தங்களை அருளிச் செய்ததற்கு பஹுமானம்போல் அமைந்த பொருத்தத்தையும் ரஸிக்க முடிகிறது.



ஸ்வாமி தேசிகன் எம்பெருமான்களின் பஹுமானங்களுடன்

இவையனைத்தும் தேவரீர் அவதரித்த மண்ணின் மகிமைதான் என நம்புகிறோம்!!

இதென்ன! திவ்ய தேசத்து எம்பெருமானின் திருமாலை-திருப்பரியட்ட மரியாதையும் கூடையும் பொலிந்து தோன்றிய தோளொடு அர்ச்சகர் குழாம், பத்து குடைகள், வெண் சாமரம், வைணவ இலச்சினை பொறித்த கொடி-ஆலவட்டம், தீவட்டிகள் சூழ, மேள-தாளங்கள் மங்களம் முழங்க, பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாண்டு (ஸ்வஸ்திவாசனம்) எடுத்தேத்த, வைணவர் குழாம் புடைசூழ, சதிரிளமடவார் கும்மியடித்துக் களிக்க, வழிநெடுங்கண் இருமருங்கிலும் மடந்தையர் வாழ்த்த, மயிலை மாடவீதிகளில் வலம் வந்து ஆலய மண்டபத்தை அடைகின்றனவே! ''வேதஒலியும் விழாஒலியும் பிள்ளைக்குழா விளையாட்டொலியும்' காணும்போது, இத்தலம் தென்திருப்பேரையோ! மாடமா மயிலையோ என ப்ரமிக்கவைக்கிறதே!!

**பேயர்:** ஆம்; அங்கே ஆலயத் திருமாமணி மண்டபத்தில் எம்பெருமான் ப்ரஸாதங்களை ஸ்வீகரித்து க்ருதார்த்தர் ஆக, ஆர்வத்துடன் முன்கூட்டியே நின்று பொலியும் நிகமாந்த தேசிகனை ஸேவியுங்கள்.

**அடியார்கள்:** தன்யராகிறோம் ஸ்வாமி!

**பேயர்:** இதோ, 'பஹுமான விழா' தொடங்கி விட்டதே. தேசிகனுக்கு, முதலில் க்ஷேத்ராதீசனும் -நான் கண்ட திருவாம் அலர்மேல் மங்காநாயிகா ஸமேதனுமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமானின் திருப்பரியட்ட-மாலைகள், திருத்துழாய்ப்ப்ரஸாதங்கள், திருச்சின்னஓசை இனிமையுடன், ப்ரஸாதிக்கப்படுகிறது.

அங்கே அழகாக, இனிமையான குரலில் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு எம்பெருமான்களை அனைவர்க்கும் அறிமுகம் செய்த வண்ணம் அருளப்பாடிடுவது யாரது? அந்தந்த திவ்யதேசத்திற்கே அழைத்துச் செல்வது போல் உள்ளதே!

**அடியார்கள்:** ஸ்வாமி! ரங்கநாதன் எனும் திருநாமமுடையவர்; இங்கே திருக்கோயிலில் எம்பெருமானுக்கு அவரைப் பிராயம்

தொடங்கி அநவரதம் அருளிச்செயல்கள் ஸேவிக்கும் தொண்டில் ஈடுபட்டுக் கிடப்பவர்.



**பேயர்:** அவன் திருநாமம் நினைவுபடுத்துவது போல், அடுத்து அன்றிவ்வுலகினை ஆக்கின அரங்கனின் ப்ரஸாதம் அருளப்படுகிறது. தொடர்ந்து திருமலை-பெருமாள்கோயில் எனும் ஸம்ப்ரதாய க்ரமத்தை யொட்டி, அரும்பொருள் நூல் விரித்து வேங்கடமாமலை மேவிய வனுடையவும்; அடுத்து அத்தனிடமாம் அத்திகிரி எம்பெருமானுடையவும் ப்ரஸாதம் ஸாதிக்கப்படுகிறது .....

இதென்ன விசேஷ மங்களவாத்ய ஒலி கேட்கிறதே?

**அடியார்கள்:** ஸ்வாமிந்! திருமயிலையின் மற்றொரு க்ஷேத்ராதீசனான ஸ்ரீமயூரவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ ஆதிகேசவப்பெருமானின் ப்ரஸாதங்கள் ஏந்தி திருக்கோயில் அர்ச்சகர்கள் எழுந்தருளுகிறார்கள். அவ்வெம்பெருமான் ப்ரஸாதம் முறையுடன் ஸ்வாமி தேசிகனுக்கு சார்த்தப்படுகிறது.

**பேயர்:** களித்தோம். மேற்கொண்டு க்ரமமாக ஒவ்வொரு எம்பெருமான்களின் ப்ரஸாதமும் அருளப்பாடிட்டு சார்த்தப்படுகிறது. 'அஹமஹமிகயா' நான் முந்தி-நான் முந்தி என எம்பெருமான்கள் அருள் தர எண்ணி த்வரிப்பதைக் காண்பது, ஓர் ஆனந் தானுபவமே.

**அடியார்கள்:** ஆழ்வீரே! மண்டபத்தில் மண்டியிருக்கும் அடியார்கள் அனைவரும் மறைவு இல்லாமல் வைபவத்தை ஸேவிக்க முடிகிறதே; ஈதென்ன! வைகுந்தப் பதி அமைந்த மண்டபமா? லௌகிக ரீதியில் (தொலைக்காட்சி நேர்காணல் வஸதி) அமைத்துக் கொடுத்த அதிகாரிகளின் சாதுர்யம் போற்றத்தக்கதே! இத்தருணத்தில், ஸ்ரீமந்நாதமுனிகளின் (ந்யாய தத்வம் நூலின்) மங்களாசரணம் நினைவுக்கு வருகிறது. ''ஒரே நேரத்தில், அனைத்தையும், நேராகவே, தானே, அறிபவன்'' (ய: வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:) என எம்பெருமானைத் துதிக்கிறார் அல்லவா! அடியோங்களும் அந்நிலை எய்தி னோமே!! இச்லோகத்தை (ய: வீக்ஷதி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:) என சிறிது பாற்றி அமைத்தால், அவர் பெருமை மாசூணாதோ, பேயோனே!

இவ்வைபவம் முறைப் படிக்கும்-எந்தவித குழப்பமும் இல்லாது அமைதியுடன் இனிதே நடந்தேறியது. ஸேவார்த்திகளான அடியோங்களுக்கும் 'அஸௌ அஸௌ இதி' (இவரிவர் எம்பெருமானென்று) ஒவ்வொரு திவ்யதேசம், அந்தந்த எம்பெரு மான்-பிராட்டியினுடைய திருநாமங் கள், பொருத்தமாயும்-கச்சிதமாயும் குறிப்பிடப்பட்ட பாசுரங்கள் இவை களுடன் ஸ்வாமி தேசிகன் ப்ரஸாதம் ஸ்வீகரித்ததை ஸேவித்தபோது, ஸ்வாமி நம்மாழ்வார் காலத்தில் நடந்த வைபவத்தை நாம் ஸேவிக்கப் பெற்றிலோமே என்ற விடாயெல்லாம் தீர்ந்தது. இவ்விதம் விழாவினை சிறப்புற நடாத்திய ஆலய அர்ச்சகர்களுக்கும், அதிகாரிகளுக்கும், கைங்கர்யபரர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும், அனைத்து நலன்களையும் 'அருள் செய், பரம!' எனக் கரம் கூப்பி-சிரம் தாழ்த்தி இறைஞ்சுகிறோம்.

பேயர்: ததாஸ்து! நாமும் கண்டு களித்துப் பல்லாண்டு பாடுகிறோம்.

''வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசிரியன்! வாழியவன் கோதிலாத் தாள் மலரைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரள்!! ''

''வன்பெரு வானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர வாழ்ந்திடுவீர்!''

(திரை விழுகிறது – உவகை எழுகிறது)

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** பாட்டீ! ஒரு வடமொழிப் புலவர், ஸ்வாமியை கவிதை இயற்றும் போட்டிக்கு அழைச்சார்-னு சொன்னேளே - போட்டி நடந்ததா? யார் ஜெயிச்சா? எப்படி? விவரமா சொல்லுங்களேன்.

**பங்கஜம் பாட்டி:** அப்பா! ஆர்வத்தப் பாரு. இப்படித்தான் இருந்தா அங்க இருந்த ஸ்ரீவைஷ்ணவாள்ளாம். இன்னும், இதை சாக்கா வெச்சு, பெரியபெருமாளுக்கு ஸ்தோத்ரமா ஒரு ஒசந்த காவ்யத்த அவர் பண்ணனும்-னும் அவா ரங்கநாதன வேண்டிண்டா. போட்டியிட்ட கவி, தான் ரங்நாதனோட திருவடியப் பத்தி எழுதபோறதா சொல்லி, 'இதைவிட ஒசத்தியான விஷயத்தப் பத்தி ஒம்மால் சொல்ல முடியுமா?' என ஆணவமா பார்த்தானாம். ஸ்வாமியும் எம்பெருமானை த்யானம் பண்ணிண்டு, அவர் நியமிக்க, 'ரங்நாதனோட திருவடி நிலையை (பாதுகையை)ப் பத்தி எழுதரேன்-னாராம். ஸ்ரீவைஷ்ணவாளுக்கெல்லாம் அப்பவே ஸ்வாமி ஜெயிச்சுட்டதா ஸந்தோஷம் உண்டாச்சாம்.

அன்னிக்கு ராத்ரி கழிஞ்சுது. ராத்ரி முழுக்க கண் முழிச்சிண்டு எழுதியும், அந்த கவிஞனால 300 ச்லோகங்கள்கூட முடிக்க முடியலயாம். ஸ்வாமியோ, அந்த ராத்ரியோட ஒரு யாமத்துல 1008 ச்லோகங்கள்கொண்ட ஒரு காவ்யத்தை பண்ணியிருந்தார். என்ன அத்புதம்! ச்லோகங்களோ பல்வேறு வ்ருத்தங்கள்ள அமஞ்சிருந்தன. சித்திர பந்தம் ஒண்ணே போறும் ஸ்வாமியின் சொல்-வண்ணத்துக்கு சாட்சியா. ஸ்வாமி நம்மாழ்வார் வாக்கிலேர்ந்து வந்த திருவாய்மொழியோ! இல்ல, அரங்கன் பாதுகையின் ஒலியோ!! -ன்னு வியக்கும்படி இருந்தது.

**ஸுமதி:** பாட்டீ! நீங்க 'திருவாய்மொழியோ-ன்னு இருந்தது'-ன்னேளே, நேக்கு இன்னோரு பொருத்தம் தோணறது - ''இவை ஆயிரமும்''-னு ஆழ்வார் சொன்னார்; ஸ்வாமியும் 'பாதுகா ஸஹஸ்ரம்' பண்ணார். இங்கேயும், பெரியவாள விட அதிகம் சொல்லாத, அவரோட தன்னடக்கம் தெரியறது.

**பங்கஜம் பாட்டி:** ஸ்வாமியோட 'தன்னடக் கத்தப்' பத்தி நீ சொன்னதும், நேக்கு அவரோட 'நேர்மையை' (பக்ஷபாதம் இல்லாத குணத்தை)க் காட்டும் ஒரு ஸம்பவம் ஞாபகத்துக்கு வரது. இவருடைய இளம்பருவ ஸ்நேஹிதர் - வித்யாரண்யரப் பத்தி சொல்லியிருக்கேனோல்யோ....

**ஸுமதி:** ஆமாம் பாட்டீ! வித்யாரண்யர், ராஜா கிட்டேர்ந்து நெறய பணம் வாங்கித்தரேன், வாரும்-னு சொன்னப்போ, எவ்வளோ வைராக்யத்தோட ஸ்வாமி அத மறுத்துட்டார் - அப்படீங்றத்த சொல்லிருக்கேள்.

**பங்கஜம் பாட்டி:** இப்ப கேளு; வித்யாரண்யர் அத்வைத மதத்தைச் சேர்ந்தவர். அவருக்கும், அக்ஷோப்யமுனி-ன்ற த்வைத ஸன்யாஸிக்கும் வாக்குவாதம் உண்டாச்சு. ஸ்வாமிய நடுவரா ஏத்துண்டு, ரெண்டு பேரும் அவாவா பக்ஷத்தச் சொன்னா. ரெண்டயும் சீர்தூக்கிப் பாத்த ஸ்வாமி, த்வைத ஸன்யாஸி சொல்றதுதான், பெரும்பாலும் ப்ரமாணத்த ஒட்டிப் போறது - அப்படீன்னு தீர்மானிச்சார். ரெண்டு பேருமே இவரோட 'நேர்மை'க்குத் தலை வணங்கினா.

இப்போ, ஸ்வாமி வைராக்யசீலரா இருந்த விஷயத்த ஒட்டி நடந்த ஒரு ஸம்பவத்தக்கேக்கறயா?- பொறாமைக்காரர்கள் சிலர், ஸ்வாமியோட இந்த வைராக்யத்தை ஒட்டிய வறுமையைக் கேலி செய்ய முயன்றனர். ஒரு ப்ரஹ்மசாரி, தன் கல்யாணத்துக்காக, தனம் வேணும்-னு அவாகிட்ட கேட்டபோது, அவாள்ளாம் ''அதோ வேங்கடநாதன்-னு இருக்கார் பாரு; பெரிய பணக்காரர் - அவரிண்ட போய் கேளு''-னா. அப்பாவிப் ப்ரஹ்மசாரியும் ஸ்வாமியிடம் யாசித்தான். ஸ்வாமி அவனை, தாயார் ஸன்னிதிக்கு அழச்சுண்டு போய், தாயார் விஷயமா 'ஸ்ரீஸ்துதி'-ன்ற ஸ்தோத்ரத்தால ப்ரார்த்தித்தார். என்ன ஆச்சர்யம் - ஆகாசத்திலேர்ந்து ஸ்வர்ண-மழை பெய்தது. ப்ரஹ்மசாரியை எடுத்துக்கச் சொன்னார். அவன் தேவையானதை

மட்டும் எடுத்துண்டு, ‘போதும்’-னான். ஸ்வாமி அவனிடம் ‘மீதியை, உன்ன இங்க அனுப்பி உபகாரம் செய்தவாளுக்குக் கொடு’ என்றாராம்... என்னம்மா, ஒடம்ப குலுக்கிக்கற!

மெய் சிலிர்க்கறது பாட்டீ!

**பங்கஜம் பாட்டி:** இப்படி ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில காலக்ஷேபங்கள் ஸாதித்துக் கொண்டு எழுந் தருளியிருக்கும் ஸமயம், ஸ்வாமிதேசிகனின் திருக்குமாரரும் சிஷ்யருமான ஸ்ரீநயினாரா சார்யர்-னு அழைக்கப்பட்ட குமார வரதாசார்யர், ஸ்வாமி விஷயமா ‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:’-னு தொடங்கும் ஒரு ஸம்ஸ்க்ருத தனியன் அருளிச் செய்து, ஸ்வாமியோட திருவடி-ல ஸமர்ப்பிச் சார். ரஹஸ்ய மந்த்ரங்களின் அர்த்தங்கள உள்ளடக்கியதாய், பொருளாழம் மிகுந்த இந்த ச்லோகத்த ஸ்வாமி ரொம்ப உகந்து ஏத்துண்டார். நம்மோட ஸம்ப்ரதாயப்படி அவரோட ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களுக்குத் தொடக்கமாக இத்தனியனை ஸேவிப்பதை வழக்கமா வெச்சுண்ட்ருக்கோம்.

**ஸுமதி:** ஒரு நிமிஷம் பாட்டி! நீங்க சொல்லிக் கொடுத்த இந்ததனியன், நான் ஒரு தரம் சொல்லிக்காட்றேன் - ‘‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ நவேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி’’

**பங்கஜம் பாட்டி:** சமுத்து குட்டி! அழகா சொன்னே.

**ஸுமதி:** தேங்க்யூ பாட்டீ! மேல என்ன நடந்தது? சொல்லுங்கோ.

**பங்கஜம் பாட்டி:** இப்படி இருக்கச்சே ஒரு ஸமயம் விதேசியான யவநர்கள், ஸ்ரீரங்கத்தோட ஸ்ரீயை (செல்வச் செழிப்பை) கேள்விப்பட்டு அத கொள்ளையடிக்க படையோட வந்தா. இத்த தெரிஞ்சிண்ட ஊர்ப் பெரியவா, கோயில காப்பாத்த பெரியபெருமாள ஒரு கல் திரைசாத்தி மறச்சுட்டு, நம்பெருமாள ஏள்ளப் பண்ணிண்டு வடதேசத்துக்கு போயிட்டா. திருமலை-ல ரஹஸ்யமா தங்கிண்டு சுருக்கமா திருவாராதனம் பண்ணிண்ட்ருந்தா-ன்னு சொல்றா.

அந்த காலத்துல ஸ்ரீரங்கத்துல, ஸ்ரீஸுதர்சன ஸூரி-னு ஒரு பெரியவர் - ஸ்ரீபாஷ்யத்துக்கு விவரமா ‘ச்ருதப்ரகாசிகை’-ன்ற க்ரந்தம் எழுதினவர்; வயஸாச்சு-ன்ற காரணத்தால ஸ்ரீரங்கத்த விட்டு வெளிய போகமுடியதவரா இருந்தார். அவர், தன்னப்பத்தி கவலப்படாம, தான் எழுதின ஒசந்த வ்யாக்யான நூல் பத்ரமா இருக்கணுமே-ன்னு யோசிச்சு, அந்த ஓலச்சு வடியையும் தன் இரு சிறு பிள்ளை களையும் காப்பாத்தச் சொல்லி, ஸ்வாமி தேசிகனிடம் ஒப்படச்சார். (பெருமாளக் காணாத எதிரிகள் ஊரைச் சூறையாடி, கோயிலை இடித்து, வைஷ்ணவர்களை கொன்று வெறியாட்டம் ஆடினா; அதுல, ஸுதர்ச னஸூரியும் கொல்லப் பட்டார்-ன்றது தனி சோக க்கதை!)

**ஸுமதி:** கேக்கர்த்துக்கே கொலை நடுங்கர்து; அப்பறம் என்னாச்சு பாட்டி?

**பங்கஜம் பாட்டி:** இரு; எனக்கே சொல்லமுடியல. கொஞ்சம் சமாளிச் சிண்டு அப்பறமா சொல்றேன் (கண்ணத் தொடச்சுக்கறார்)

**(தொடரும்)**

## தேசிக மொழி

### ஸ்வரூப ஸமர்ப்பணம், பர ஸமர்ப்பணம், பல ஸமர்ப்பணம்

ஜ்ஞான ஆநந்த ஸ்வரூபனாய், ஜ்ஞான ஆநந்த குணகனாய் ஸ்வயம்ப்ரகசனாய் அணுவான நான் என்கிற இந்த ஜீவாத்மாவை, இந்த ஜகத்தின் ஒரே காரணபூதனாய், ஸர்வரக்ஷகனாய், ஸர்வசேஷியான திருமகள் கேள்வனைப் பற்ற “நானுமுனக்குப் பழவடியேன்” “கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேனொருவர்க்கு உரியேனோ” என்கிறபடியே ஒருகாரணமுமின்றி இயற்கையாகவே எப்போதும் அடியேன் என்று அநுஸந்திக்கை **ஸ்வரூப ஸமர்ப்பணம்.**

ஆத்மா, அதைச் சேர்ந்தவை ஆகிய இவற்றைக் காக்கும் பொறுப்பை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்து இந்த ஆத்ம ரக்ஷணத்திற்க்காக இனி செய்யவெண்டியது ஒன்றுமில்லை என்று அவன் திருவடிகளை அடைக்கலமாகக் கொண்டு ரக்ஷித்தருள வேண்டுமென்கை **பர ஸமர்ப்பணம்.**

எம்பெருமானாலே ரக்ஷிக்கப்படும் ஆத்மாவைப் பலனிலும் தனக்கு உரிமையில்லை என்ற துணிவுடன் நித்யஸூரிகளைப் போலே கைங்கர்யத்துக்கு இயற்கைத் தகுதியுடையனான “ஆராவன்பில் அடியேனுக்கு” கர்மமடியாக வந்த அயோக்யதையெல்லாம் கழித்து வழுவிலா அடிமை கொண்டு வாழ்விக்கவேண்டுமென்கை **பல ஸமர்ப்பணம்.**

- ரஹஸ்ய நவநீதம்



ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்










ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்











ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்

















## ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்









ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்















## ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்









ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்























## வேங்கடநாதன் வியன் திருக்கோலங்கள்



ஸ்ரீ:





## ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்





















ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்












## ஸ்வாமி தேசிகன்-750 - வார்ஷிக மஹோத்ஸவம்















## பவித்ரோத்ஸவம்







# பவித்ரோத்ஸவம்







ஸ்ரீ:










## பவித்ரோத்ஸவம்









வனபோஜனம் ட்ரஸ்ட் ஸமர்ப்பித்த
கல் இழைத்த திருமண்காப்பு

ஸ்ரீ:





நவராத்ரி உத்ஸவம்







பேயாழ்வார் ஆஸ்தானம்

# விளம்பி வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் / நவம்பர் | ஐப் பசி | | | | | |
| 18.10.18 | 1 | நவமி | வியாழன் | திருவோணம் | ஐப்பசி மாதபிறப்பு நவராத்திரி உத்ஸவம் – 9ம் நாள் – மஹாநவமி – பேயாழ்வார் உத்ஸவம் – 8ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார், தேசிகன் பத்தி உலாத்தல், இரவு – ஸேவாகாலம் | ஸ்ரீ S. நாராயணன் – ஸ்ரீ T. நாராயணன் – மாதப்பிறப்பு – ஸ்ரீ ஸுதர்சன் – ஸ்ரீ முகுந்தன் |
| 19.10.18 | 2 | தசமி | வெள்ளி | அவிட்டம் | விஜயதசமி – பரிவேட்டை – பேயாழ்வார் உத்ஸவம் – 9ம் நாள் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு – பேயாழ்வார் திருமஞ் சனம் – மாலை – பெருமாள் குதிரை வாஹன புறப்பாடு, அம்பு போடுதல் – இரவு – ஸேவாகாலம் | ஸ்ரீ A.R. சாந்தக்ருஷ்ணன் – ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 20.10.18 | 3 | ஏகாதசி | சனி | சதயம் | பேயாழ்வார் சாற்றுமுறை – காலை – மங்களாசாஸனம், பேயாழ்வார் வீதி புறப்பாடு – பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை பெருமாள், தாயார், பேயாழ்வார் பத்தியுலாத்தல் – பெருமாள், பேயாழ்வார் வீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் – ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 21.10.18 | 4 | த்வாதசி | ஞாயிறு | பூரட்டாதி | பேயாழ்வார் கந்தபொடி வசந்தம் – காலை – பேயாழ்வார் வீதி புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 22.10.18 | 5 | த்ரயோதசி | திங்கள் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 23.10.18 | 6 | சதுர்த்தசி | செவ்வாய் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 24.10.18 | 7 | பௌர்ணமி | புதன் | ரேவதி | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன் |
| 25.10.18 | 8 | பிரதமை | வியாழன் | அச்வினி | திருமால்வடை | |
| 26.10.18 | 9 | த்விதீயை | வெள்ளி | பரணி | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | தேவஸ்தானம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27.10.18 | 10 | திருதீயை | சனி | கார்த்திகை | திருமங்கையாழ்வார் | |
| 28.10.18 | 11 | சதுர்த்தி | ஞாயிறு | ரோஹிணி | மாலை – கண்ணன், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 29.10.18 | 12 | பஞ்சமி | திங்கள் | மிருகசீரீஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 30.10.18 | 13 | ஷஷ்டி / சப்தமி | செவ்வாய் | திருவாதிரை / புணர்வஸு | காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர், குலசேகராழ்வார், பாஷ்யகாரர் ஆஸ்தானம் | V.D.R. பண்டு, c/o. ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் |
| 31.10.18 | 14 | அஷ்டமி | புதன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 01.11.18 | 15 | நவமி | வியாழன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 02.11.18 | 16 | தசமி | வெள்ளி | மகம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | அழிசூர் ஸ்ரீ A. வீரராகவன் – ஸ்ரீ A.V. ராமன் |
| 03.11.18 | 17 | ஏகாதசி | சனி | பூரம் | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ D. ஸ்ரீதரன் |
| 04.11.18 | 18 | த்வாதசி | ஞாயிறு | உத்திரம் | காலை – தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | S.V.S. இராகவன் பண்டு |
| 05.11.18 | 19 | த்ரயோதசி | திங்கள் | ஹஸ்தம் | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு, எண்ணைக்குடம் புறப்பாடு | ஸ்ரீ ஸ்ரீராமன் – K.S.N. குடும்பத்தினர் |
| 06.11.18 | 20 | சதுர்த்தசி | செவ்வாய் | சித்திரை | தீபாவளி பண்டிகை – காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை பொழுதுடன் ஆராதனம் – பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ R. வாஸுதேவன் |
| 07.11.18 | 21 | அமாவாசை | புதன் | ஸ்வாதி | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ T.E. தேசிகாச்சார் குடும்பத்தினர் |
| 08.11.18 | 22 | பிரதமை | வியாழன் | விசாகம் | அன்னகூட உத்ஸவம் – காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – ஆஸ்தானம் | ஸ்ரீ S. கோபால கிருஷ்ணன் |
| 09.11.18 | 23 | த்விதீயை | வெள்ளி | அனுஷம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்டு, C/O. ஸ்ரீ A.G. கோதண்டபாணி |
| 10.11.18 | 24 | திருதீயை | சனி | கேட்டை | தொண்டரடிபொடிகள் | |
| 11.11.18 | 25 | சதுர்த்தி | ஞாயிறு | மூலம் | திருமால்வடை | |
| 12.11.18 | 26 | பஞ்சமி | திங்கள் | பூராடம் | சேனைநாதன் சாற்றுமுறை – காலை – பெருமாள், சேனைநாதன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், சேனைநாதன் வீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஷோபனா ராமரத்தினம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13.11.18 | 27 | ஷஷ்டி | செவ்வாய் | உத்திராடம் | திருமால்வடை | |
| 14.11.18 | 28 | சப்தமி | புதன் | உத்திராடம் / திருவோணம் | பொய்கை ஆழ்வார் சாற்றுமுறை – கலியன் உத்ஸவம் – 1ம் நாள் – காலை – பெருமாள், பொய்கை ஆழ்வார், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், பொய்கை ஆழ்வார், தேசிகன் வீதி புறப்பாடு – இரவு – ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாச்சர் |
| 15.11.18 | 29 | அஷ்டமி | வியாழன் | ஸ்ரவணம் | கலியன் உத்ஸவம் 2ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | |
| 16.11.18 | 30 | நவமி | வெள்ளி | அவிட்டம் | பூதத்தாழ்வார் சாற்றுமுறை – கலியன் உத்ஸவம் 3ம் நாள் – காலை – பெருமாள்,தாயார் பூதத்தாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், பூதத்தாழ்வார் வீதி புறப்பாடு, பின்பு தாயாருடன் உள்புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S.T. நரசிம்மாச்சார் குடும்பத்தினர் |

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

**மஹா நவமி**
அக்டோபர் 18
(வியாழன்)

**விஜய தசமி**
அக்டோபர் 19
(வெள்ளி)

**பேயாழ்வார் திருநக்ஷத்ரம்**
(ஐப்பசி-சதயம்)
அக்டோபர் 20
(சனி)

**தீபாவளி உத்ஸவம்**
நவம்பர் 6
(செவ்வாய்)

**அன்னகூட உத்ஸவம்**
நவம்பர் 8
(வியாழன்)

**பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம்**
(ஐப்பசி-திருவோணம்)
நவம்பர் 14
(புதன்)

**ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்**
(ஐப்பசி-பூராடம்)
நவம்பர் 12
(திங்கள்)

**கலியன் உத்ஸவம்**
(10 நாட்கள்)
நவம்பர் 14
(புதன்) முதல்

**பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்**
(ஐப்பசி-அவிட்டம்)
நவம்பர் 16
(வெள்ளி)

ஸ்ரீ:

# பாலேய் தமிழர்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் தட்டை ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**அறிமுகம்**

ஆழ்வார்களில் நாயகரான குருகூர்ச் சடகோபன் தமிழ் வேதக்கடலான திருவாய்மொழி முதல் பத்தில் ஐந்தாம் பதிகத்தை முடிக்கும் தருணத்தில், தம்முடைய ஸ்ரீஸூக்தியானது பாலுக்குச் சமமான இனிய தமிழில் வல்லவர்களாலும், இசையறிந்து பாடவல்லவர்களாலும், பக்திமான்களாலும் கொண்டாடும்படியாக உள்ளது என்றும், அந்த ஸ்ரீஸூக்திகளைக் கற்பவர்களுக்கு யாதொரு துக்கமும் உண்டாகாது என்றும் அறுதியிடுகிறார்.

இவ்விடத்தில் ஸ்ரீஆளவந்தார், ''நம்மாழ்வார் கூறும் பாலேய் தமிழர்கள் யார் என்றால் முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் என்றும், இசைகாரராவது திருப்பாணாழ்வார் என்றும், பத்தர் என்பதனால் பெரியாழ்வார்'' என்றும் அருளிச்செய்வாராம்.

முதலாழ்வார்களை ஏன் 'பாலேய் தமிழர்' என்று கூறுகிறார் என்பது அவர்களின் திருநாமங்களை உற்று நோக்கினால் நமக்கு நன்கு புலப்படும். பொய்கையாழ்வாரின் சிறப்புத் திருநாமமோ ''கவிஞர் போரேறு'', பூதத்தாழ்வாரோ தாமே ''பெருந்தமிழன்'' என்று பறைசாற்றிக்கொள்கிறார், பேயாழ்வாரையோ ''தமிழ்தலைவன்'' என்று பெரியவர்கள் அழைப்பதனால், இம்மூவரையும் ஒருசேர மாறன் சடகோபன் ''பாலேய் தமிழர்'' என்று போற்றிப்புகழ்கிறார்.

இம்மூவரின் பாட்டுக்களும் தித்திக்கும் செந்தமிழில் திருமகள் கேள்வனின் குணநலன்களையும் அவனுடைய அவதார சேஷ்டிதங்



களையும் அவனடியார்களின் மஹிமை யையும் அவனைச் சரணமடைவதால் வரும் பேறுகளையும் எளிய நடையில் எடுத்துரைக் கின்றன. இந்த ப்ரபந்தங்கள் பால் போன்ற சுவை கொண்டதனால் இவர்கள் பாலேய் தமிழர் களானார்கள்.

**முதலாழ்வார்களின் அவதார மஹிமை**

பொய்கையாழ்வார் துவாபர யுகத்தில் ஐப்பசி மாத சுக்ல பக்ஷ அஷ்டமி திதியில் விஷ்ணுவின் நக்ஷத்ரமான திருவோண நன்னாளில் காஞ்சியில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் ஸந்நிதியில் ஒரு இயற்கையான நீர்நிலையில் தாமரை புஷ்பத் தில் அயோநிஜராய் (ஒரு தாயின் கர்ப்பத்தில் இல்லமல்) ஸ்ரீபாஞ்சசன்னியத்தின் அம்சமாக அவதரித்தார்.

பூதத்தாழ்வார் துவாபர யுகத்தில் ஐப்பசி மாத சுக்ல பக்ஷ நவமி திதியில் அவிட்ட திருநக்ஷத்ரத்தில் திருக்கடல்மல்லையில் தலசயநத்துறைவார் ஸந்நிதியில் ஒரு குருக்கத்திப் புஷ்பத்தில் அயோ நிஜராய் கௌமோதகீ எனும் எம்பெருமானின் கதையின் அம்சமாகத் தோன்றினார்.

பேயாழ்வார் துவாபர யுகத்தில் ஐப்பசி மாத சுக்ல பக்ஷ தசமி திதியில் சதய திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீபார்த்தஸாரதி நித்ய ஸேவை தந்தருளும் மாவல்லிக்கேணியின் தென்திசையிலுள்ள, வங்கக்கடல் கடைந்த மாதவனும் கேசவனும் எழுந்தருளியிருக்கும் நீளோதம் வந்தலைக்கும் மாமயிலையில் திருக்கிணற்றில் அயோநிஜராய் கட்கம் எனும் எம்பெருமானின் வாளின் அம்சமாக அவதரித்தார்.

**முதலாழ்வார்களின் திருநாமங்கள்**

முதலாமவர் இயற்கையான குளத்தில் அவதரித்த தனால் 'பொய்கையாழ்வார்' என்ற திருநாமம் பெற்றார். பொய்கைமுனி காஸார யோகி, ஸரோ யோகி, பொய்கைப்பிரான் என்றும் அழைக்கப் பட்டார்.

எம்பெருமானின் திருக்குணங்களை அநுபவித்தே இவ்வுலகில் இருந்து பயன் பெற்றதனால் இரண்டா மவர் 'பூதத்தாழ்வார்' எனும் திருநாமம் பெற்றார். பூதத்தார், பூதம் என்றும் குறிக்கப்பெற்றார்.

பேய் என்கிற பதம் பெரிய என்கிற அர்த்தத்தைச் சொல்லும். பெரிய பிராட்டியாரை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானைப் பெற்றதனாலேயே மூன்றாமவருக்குப் 'பேயாழ்வார்' என்ற பெயர் உண்டாயிற்று. அன்றிக்கே பகவத்குணா நுஸந்தானம் பண்ணிக்கொண்டு உலகத்தோரிடம் இருந்து வேறுபட்டுக் காணப்பட்டபடியினாலும் பேயாழ்வார் எனும் திருநாமம் பெற்றார். இவர் தாம் எம்பிரானுக்கு ஆட்பட்டது அல்லாமல், திருமழிசை ஆழ்வாரையும் திருத்திப் பணி கொண்டதனால் 'மஹதாஹ்வயர்' என்றும் இவருடைய கவிதைப் பனுவலை ச்லாகித்து ''தமிழ்தலைவன்'' என்றும் போற்றப்பட்டார்.


**எம்பெருமான் இவர்கள் திறத்தில் செய்த லீலை**

இம்முதலாழ்வார்கள் சுத்த ஸாத்விகர்களாய் ''உண்ணும்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்'' என்று எப்பொழுதும் எம்பெருமானின் திருக்குணங்களையே அநுப வித்துக்கொண்டு தனித்தனியே ஸஞ்சரித்துக் கொண்டிருந்தனர். ஒருநாள் அந்திப்போதில் நல்ல மழை பெய்யும் தினத்தில் பொய்கை யாழ்வார் திருகோவலூர் எனும் திவ்யதேசத் தில் ம்ருகண்டு மஹரிஷியின் ஆச்ரமத்தில் இடைகழியில் (ரேழியில்) சென்று மழைக்காக ஒதுங்கி பகவத் குணங்களைக் கூறிக்கொண்டு யோகசயனம் செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது பூதத்தாழ்வாரும் வந்து சேர ஒருவரை ஒருவர் வணங்கி ''இவ்விடத்தில் ஒருவர் உறங்கலாம் இருவர் உட்காரலாம்'' என்று பொய்கையார் கூற இருவரும் பகவத் சிந்தைனை யில் ஆழ்ந்தனர்.

பின்பு பேயாழ்வாரும் திருக்கோவலூர் வந்தேற அவர் மற்ற இரண்டு யோகிகளையும் வந்தனம் செய்ய ''இவ்விடத்தில் ஒருவர் படுக்கலாம், இருவர் உட்காரலாம் மூவர் நிற்கலாம்'' என்று முன் இருவரும் கூற மூவரும் நின்ற படியே ''போதயந்த: பரஸ்பரம்'' என்றும் ''ஹரிபக்த தாஸ்ய ரஸிகா: பரஸ்பரம்'' எனும்படி பகவத் குணங்களை சொல்லுதலும் கேட்டலும் செய்து களித்திருந்தனர்.

''ஸ மஹாத்மா ஸுதுர்லப:'' என்னும்படி கண்ணன் ஆதிகவிகளான முதலாழ்வார்களைக் கொண்டு தமிழ் வேதத்தை வெளிக்கொண்டுவரும் பொருட்டு ஒரு சேஷ்டிதம் செய்யலானான். அந்த இடைகழியில் மூவரும் நிற்கும்பொழுது நான்காம் நபராய் தன்திருமேனியை மறைத்து அம்மூவரும் பொறுக்கவொண்ணாத மிக்க நெருக்கத்தைச் செய்தருளினான் ஆயன்.



பிறரெவரேனும் அங்கு உளரோ என வினவ, பொய்கையாழ்வார் இவ்வையத்தை அகலாக பாவித்து அதில் ஆழிக்கடலை நெய்யாக ஊற்றி அதில் கதிரவனை விளக்காக ஏற்றி திருவாழியை ஏந்திக்கொண்டிருக்கும் எம்பெருமானை காண முயன்றார்.

பூதத்தாழ்வாரோ தம்முடைய அன்பையே நெய்க்கும் திரிக்கும் ஆதாரமான அகலாக பாவித்து, தம்முடைய ஆர்வத்தை நெய்யாக உற்றி, இனிமையாலே உருகும் தம்மனதை அந்த அகலிலே திரியாக இட்டு ஞானமென்னும் சுடர்விளக்கை ஏற்றி நாரணனைத் தொழுதார்.

இவ்விருவரும் ஏற்றிய விளக்கினைக் கொண்டு தம்மூவரையும் நெருக்குவது வேறுயாரும் அல்ல அந்தத் திருமகள் கேள்வனே என்றும் அவன் பொன்மேனி உடையவன் என்றும் அவன் திருவாழி, திருச்சங்கை அணிந்தவன் என்றும் அவன் கார்மேனியுடன் கூடினவன் என்றும் அறுதியிட்டார்

அந்த த்ரிவிக்ரமன் முதலாழ்வார்கள் எனும் யோகிகளைக் கொண்டு தமிழ் மொழியில் தெளியாத மறைநிலங்கள் தெளிய இவர்கள் தொடக்கமாக பன்னிரு ஆழ்வார்களைக் கொண்டு சந்தமிகு தமிழ்மறையினை இவ்வுலகிற்கு வெளிக்கொணர்ந்தான்.

**முதலாழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களின் அர்த்தவிசேஷம்**

வருத்தும் புறவிருளை மாற்றும் முதல் திருவந்தாதியை பொய்கையாழ்வாரும், நந்தா ஞானச்சுடர் விளக்கேற்றிய அன்பே தகளியா என்று தொடங்கும் இரண்டாம் திருவந்தாதியை பூதத்தாழ்வாரும், கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் திருக்கண்டேன் எனும் மூன்றாம் திருவந்தாதியை பேயாழ்வாரும் அருளிச்செயதனர்.

இந்த மூன்று ப்ரபந்தங்களும் ஒவ்வொன்றும் நூறு பாசுரங்களைக் கொண்டும் நேரிசை வெண்பா என்னும் செய்யுள் இலக்கணத்தைக் கொண்டும் அந்தாதி சொற்றொடர் கொண்டும் இயற்றப்பட்டன.

இதில் ''செய்ய சுடராழியானடிக்கே'' என்பதனால் பொய்கையாழ்வார் எம்பெருமானின் விபூதிகளை பேசினார். பூதத்தாழ்வார் அந்த எம்பெருமான் 'நாராயணன்' என்றார். அவன் 'பெரிய பிராட்டி யுடன் எப்பொழுதும் கூடினவன்' என்கிறார்

பேயாழ்வார்..

''ஒண் தாமரையாள் கேள்வன்'' என்று திரு மகள் நாயகனே த்யானிக்கதக்கவன் என்றும் ''தொழுதேன் அடலோத வண்ணரடி'' ''மாயவனையே மனத்து வை'' என்பதனால் அவனடியிலே சரண் புகுவதுவே உபாயம் என்றும் ''வாயவனையல்லது வாழ்த்தாது'' எனும் பாசுரத்தால் அவனைத் தவிர வேறு ஒரு தெய்வம் தொழவல்லதன்று என்றும், ''மூவாத மாக்கதி'' என்று அவன் திருவடியிலேயே கைங்கர்யம் பண்ணுவதே நமக்குக் கிடைக்கும் பேறு என்றும் ''தமருகந்ததெவ்வுரும்'' என்பதனாலே எம்பெரு மானின் திவ்ய மங்கள விக்ரஹத்தின் பெருமை யயும் பொய்கையாழ்வாரின் பாசுரங்களினால் அறியலாம்.

''நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு'' என்று நாராயணனே பரன் என்றும், ''காரோத வண்ணன் கழல்'' என்பதனால் அவன் திருவடி அடைவதே உபாயம் என்றும், ''திருமங்கை நின்றருளும் தெய்வம் நாவாழ்த்தும்'' என்பதனால் கைங்கர்யத்தையும், ''மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு'' என்று ஸர்வ வேத ஸாரம் ஹரிநாமம் என்றும், ''சாத்தி உரைத்தல் தவம்'' என்று நாம ஸங்கீர்த்தனத்தின் பெருமையையும் கூறினார் பூதத்தாழ்வார்.

''திருக்கண்டேன்'' ''சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச்சார்வு'' என்பதனால் அந்த திருநாரணனே பரன் என்றும், ''நாம் அங்கையால்= தொழுது'' என்று உபாயத்தையும், ''மறவாது வாழ்த்துக'' என்பதனால் போகத்தையும், உள்ளத்தே த்யானித்தால் அவன் ''இனியவன்'' என்றும், ''ஓத வண்ணனே வருநரகம் தீர்க்கும் மருந்து'' என்றும் பேயாழ்வார் தமது பாசுரங்களால் தெளிவித்தார்.

மேலும் இவர்கள் விபவாவதாரங்களையும் திவ்யதேச எம்பெருமான்களையும் பலவாறு மங்களாசாஸனம் செய்கின்றனர். முதலாழ்வார் களின் பெருமை பேச்சுக்கு நிலமன்று.

**முதலாழ்வார்களைப் பற்றி பெரியோர்களின் மங்களாசாஸனம்**

இவ்வாழ்வார்களை நம்மாழ்வார் ''இன்கவிபாடும் பரம கவிகள்'' என்றும், திருமங்கை மன்னன் ''செந்தமிழ் பாடுவார்'' என்றும் போற்றுகிறார்கள். அமுதானார் இராமாநுச நூற்றந்தாதியில் மூன்று பாசுரங்களினாலும் உடையவரின் ஞான புத்திரரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் பொய்கை பூதம் இருவரின் தனியன்களையும், குருகைக்காவலப்பன் பேயாழ்வாரின் தனிய னையும் இயற்றி ஆழ்வார்களின் பால் தமது பக்தியை வெளிப்படுத்தினர்.

ஸ்வாமி தேஶிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் பல இடங்களில் முதலாழ்வார்களின் பாசுரங்களை எடுத்து சாஸ்த்ரார்த்தங்களை நிரூபிக்கிறார். குறிப்பாக ஆசார்யக்ருத்ய அதிகாரத்தில் ''பாட்டுக்குரிய பழையவர்'' எனும் பாசுரத்தில் இவ்வாழ்வார்களின் பெருமைகளைப் பரக்கப்பேசி தம்முடைய ஊற்றத்தை வெளிப்படுத்துகிறார்.

மேலும் திருக்கோவலூர் எம்பெருமான் திறத்து தாம் வடமொழியில் எழுதிய தேஹளீச ஸ்துதியில் ஆயனார் ஆழ்வார்களின் திறத்தில் செய்த லீலா விசேஷத்தையும், இப்பக்தர்கள் மூலமாக அவன் நமக்களித்த உபகாரத்தையும், முதலாழ்வார்களின் பகவத் குணாநுபவத்தையும், திருவந்தாதிகளின் ஏற்றத்தையும், மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழையும் கூட்டில் காணக்கிடக்கும் விசேஷார்த்தங்களையும் ரஸாபாவங்களுடன் பலவிதமாய் அநுபவித்து நம்போல்வோருக்கு அளித்து பேருபகாரம் செய்தருளியிருக்கிறார்.

ஸ்வாமி தேஶிகன் தாமருளிய ப்ரபந்த ஸாரத்திலும் முதலாழ்வார் மூவருக்கும் தனித்தனியே பாசுரமிட்டு அவர்களின் அவதார மஹிமையையும் அவர்களின் ஸ்ரீஸூக்திகளின் ஏற்றங்களையும் கூறி அவர்களின் அநுக்ரஹத்தை வேண்டும் பொருட்டு அருளிச்செய்து இருக்கிறார்.

**முடிவுரை**

இவ்வளவு பெருமை வாய்ந்த முதலாழ்வார்களின் திருநக்ஷத்ரங்கள் நம் தேவஸ்தானதில் பேயாழ் வாருக்கு பத்து நாட்களும் மற்ற இருவருக்கும் அவர்களுடைய திரு அவதார தினங்களிலும் ஐப்பசி மாதம் மிகவும் சீர்மையுடன் கொண்டாடப் படுகின்றன.

இந்த மஹோத்ஸவங்களில் அலர்மேல் மங்கை மற்றும் ஸ்ரீநிவாஸனின் அடியார்கள் கலந்து கொண்டு முதலாழ்வார்களின் கருணைக்கு இலக்காகலாம்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



*With Best Compliments from:*

# Kozhiyalam Family

## K. Srinivasan, K. Santha

**16/31, West Circular Road, Mandaveli, Chennai 600028.**


**SVDD thanks Kozhiyalam Family**
for sponsoring this month's issue of Desika Sandesam










ஸ்வர்ண ஸிம்ஹாஸனத்தில்
வீற்றிருக்கும்
கவிதார்க்கிக ஸிம்ஹம்